


24.09.2026

தலைப்புச் செய்திகள்

- சேவை உணர்வின் இன்றியமையாமையை பிரதமர் திரு. நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.
- காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 58ஆவது கூட்டம் புதுதில்லியில் இன்று பிற்பகல் நடைபெறுகிறது.
- மக்கள் நலனுக்கு எதிரான எந்த திட்டத்தையும் த.வெ.க அரசு செயல்படுத்தாது என்று மாநில சட்ட அமைச்சர் திரு. நிர்மல் குமார் கூறியுள்ளார்.
- நெல் கொள்முதல் நிலையங்களில் உடனுக்குடன் நெல் கொள்முதல் செய்யப்பட வேண்டும் என்று பா.ம.க தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.
- ஆசிய விளையாட்டு போட்டிகளின் கபடி ஆடவர் அரையிறுதிக்கு இந்தியா முன்னேறியுள்ளது.

இனி விரிவான செய்திகள்

*****************

பிரதமர்

சேவை உணர்வின் இன்றியமையாமையை பிரதமர் திரு.நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

மக்கள் சேவை உறுதிமொழி இயக்கத்தின் ஒருபகுதியாக, சேவை யாத்திரை குழுவினருடன் இன்று காணொலி வாயிலாக கலந்துரையாடிய பிரதமர், சேவை உணர்வின் அடிப்படையில் 4 கோடி ஏழை மக்கள் வீடுகளை பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

பிரதமரின் வேளாண் நிதி உதவி, சூரிய ஒளி இல்ல திட்டங்களால் கடைகோடி மக்களும் பயன்பெற்றிருப்பதாக அவர் எடுத்துரைத்தார்.

தேசிய அரசியலுடன் - சேவைக்கான உணர்வு இணைந்தால் நாட்டின் வளர்ச்சிக்கு அதுவே உந்து சக்தியாக இருக்கும் என்றும் எடுத்துரைத்தார்.

பல்வேறு புதிய திட்டங்களின் மூலம் 25 கோடி மக்கள் வறுமையிலிருந்து மீட்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

வளர்ச்சி அடைந்த இந்தியாவின் சிற்பிகளான இளைய தலைமுறையினரே அதன் பயனாளிகளாகவும் திகழ்வார்கள் என்றும் குறிப்பிட்டார்.

இந்த கலந்துரையாடலின்போது சேவை யாத்திரிகர் குழுவினர், மரம் நடுதல், தூய்மை இயக்கம், போன்ற தங்கள் அனுபவங்களை பிரதமருடன் பகிர்ந்துகொண்டனர்.

*****************

காவிரி நீர் மேலாண்மை ஆணையம்

காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 58ஆவது கூட்டம் அதன் தலைவர் திரு. எஸ்.கே. ஹல்தர் தலைமையில் புதுதில்லியில் இன்று பிற்பகல் நடைபெறுகிறது.

தமிழகம், கர்நாடகம், உள்ளிட்ட மாநிலங்களின் பிரதிநிதிகள் பங்கேற்கும் இக்கூட்டத்தில் நாளைமுதல், அடுத்த 15 நாட்களுக்கு தமிழகத்திற்கு, கர்நாடகம் திறக்க வேண்டிய காவிரி நீரின் அளவு குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

*****************

சர்பானந்த சோனோவால்

தேசிய வளர்ச்சியில் இந்திய கடல்சார் பிரிவு முக்கிய அங்கம் வகிப்பதாக மத்திய நீர்வளத் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

உலக கடல் சார் தினத்தை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் கடல்சார் வர்த்தகத்திலும், மேம்பாட்டிலும், ஈடுபட்டுள்ள பணியாளர்களின் அர்ப்பணிப்பு மிகு சேவையை நினைவு கூறும் வகையில் இத்தினம் கொண்டாடப்படுவதாக கூறினார்.

கடல்சார் கொள்கைகளையும், ஒழுங்குமுறைகளையும் தொழில்நுட்ப உதவிகளுடனும், பயிற்சிகளுடனும் இதர சேவைகளுடனும் முன்னெடுத்து செல்வதை இத்தினம் வலியுறுத்துகிறது.

*****************

கைபேசி

நாட்டின் ஒட்டுமொத்த கைபேசி தேவையில் 99.2 சதவிகிதம் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுவதாக மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை செயலர் திரு.எஸ்.கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 13ஆவது வருடாந்திர பொது விவகார கூட்டமைப்பு அமர்வில் இன்று உரையாற்றிய அவர்,

ஆண்டொன்றுக்கு 33 கோடி கைபேசிகள் இந்தியாவில் தயா◌ா◌ிக்கப்படுவதாக குறிப்பிட்டா◌ா◌்.

உலகின் மிகப்பொ◌ிய 5 நிறுவனங்கள் தங்களது கைபேசிகளை நம் நாட்டிலேயே தயா◌ா◌ிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினா◌ா◌்.

உற்பத்தி பெருக்கம், உள்நாட்டு மதிப்பு கூட்டல், விநியோக சங்கிலியை வலுப்படுத்துவது, மீட்சி, இந்தியாவின் உலகளாவிய போட்டியை மேம்படுத்துவது போன்றவற்றை நோக்கமாக கொண்டு கைபேசி உற்பத்தி திட்டத்தை மத்திய அரசு அறிமுகம் செய்துள்ளதாக குறிப்பிட்டா◌ா◌்.

****************

எண்ணெய்

உள்நாட்டு சமையல் எண்ணெய் விலையை கட்டுப்படுத்தும் வகையில், இறக்குமதி செய்யப்படும் கச்சா சமையல் எண்ணெய்க்கான அடிப்படை சுங்க வரியை மத்திய அரசு குறைத்துள்ளது.

சர்வதேச அளவில் சமையல் எண்ணெய் விலை அதிகா◌ித்து வரும் நிலையில் நுகர்வோருக்கு நிவாரணம் அளிக்கும் வகையிலும், பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையிலும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

****************

நி◌ா◌்மல் குமா◌ா◌்

மக்கள் நலனிற்கு எதிரான எந்த திட்டத்தையும் த.வெ.க. அரசு செயல்படுத்தாது என்று மாநில சட்டத்துறை அமைச்சர் திரு. நி◌ா◌்மல் குமா◌ா◌் தொ◌ிவித்துள்ளா◌ா◌்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், புதிய தலைமை செயலகம் நகரபகுதிக்குள் அமையும் என்றும், இதற்கான ஆய்வு பணிகள் நடைபெற்று வருகிறது என்றும் குறிப்பிட்டா◌ா◌்.

****************

உயர்நீதிமன்றம்

மதுராந்தரகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுகளின் இடைத்தேர்தலுக்கு தடை கோரிய வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் இன்று தள்ளுபடி செய்துள்ளது.

இதனிடையே இவ்விரு தொகுதிகளில் வாக்காளர்களுக்கு த.வெ.க-சா◌ா◌்பில் பணப்பட்டுவாடா செய்யப்படுவதாக அஇஅதிமுக சா◌ா◌்பில் தேர்தல் ஆணையத்தில் புகா◌ா◌் அளிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே இடைத்தேர்தலில் த.வெ.க.விற்கு தமிழ் மாநில காங்கிரஸ் ஆதரவு அளிக்கும் என்று அக்கட்சியின் தலைவர் திரு.ஜி.கே.வாசன் அறிவித்துள்ளார்.

****************

பிரதமர் – சேவா சங்கல்ப்

.. Music ..

பிரதமர் திரு.நரேந்திரமோடி 25 ஆண்டுகள் பொது வாழ்க்கையை நிறைவு செய்த நிலையில், வளர்ச்சி அடைந்த பாரதப் பாதை என்ற அவரது தொலைநோக்கு பயணத்தில், மக்கள் சேவை உறுதிமொழி இயக்கத்தின் ஒருபகுதியாக, புதிய கல்வி கொள்கை 2020 குறித்த செய்தி தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

.. Music ..

கல்வி கட்டமைப்பு முறையில் பெரிய மாற்றங்களை நோக்கமாக கொண்டு தேசிய புதிய கல்வி கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த பாடபிரிவுகளை தேர்ந்தெடுப்பது என்று மாணவர்களுக்கு இது வாய்ப்பு அளிப்பதோடு, திறன்மேம்பாடு, ஆராய்ச்சி, படைப்பாற்றல் திறன், புதிய சிந்தனைகளை முன்னெடுத்து செல்லுதல் போன்றவற்றிற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

உயர்கல்வியின் தரத்தை மேம்படுத்தி, புதிய திறன்களுக்கான வாய்ப்புகளை வழங்கி, எதிர்கால சுழல்களுக்கு ஏற்ப, புதிய வேலை வாய்ப்புகளுக்கு மாணாக்கரை தயார்படுத்துகிறது.

ஆராய்ச்சியை வலுப்படுத்தி, கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் இடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தவும் அரசு பல்வேறு நடைமுறைகளை இதன்கீழ் உருவாக்கியுள்ளது.

மாணாக்கர் விரும்பும் வகையில் கல்வியை மேலும் இலகுவாக்கி, அனைத்தையும் உள்ளடக்கி, எதிர்கால வாய்ப்பகளின் திறவுகோலாக, புதிய தேசிய கல்வி கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

புதிய கல்வி கொள்கை நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதாக திருச்சி தேசிய கல்லூரியின் வங்கி மேலாண்மை பிரிவு உதவி பேராசிரியர் திரு அரவிந்த் கூறுகிறார்.

வாய்ஸ்

.. Music ..

****************

அன்புமணி

நெல் கொள்முதல் நிலையங்களில் உடனுக்குடன் நெல் கொள்முதல் செய்யப்பட வேண்டும் என்று பா.ம.க தலைவர் டாக்டர். அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளாா்.

தஞ்சை திருவாரூர் உள்ளிட்ட காவிரி பாசன மாவட்டங்களில் உள்ள நெல் கொள்முதல் நிலையங்களில் 6 லட்சத்திற்கும் கூடுதலான நெல் மூட்டைகள் தேங்கி கிடப்பதாக செய்திகள் வருவதை தமது சமூக வலைதள பதிவில் அவர் சுட்டிக்காட்டியுள்ளாா்.

விவசாயிகள் பாடுபட்டு விளைவித்த நெல் மூட்டைகளை உரிய காலத்தில் கொள்முதல் செய்யாமல் அலைக்கழிப்பது கண்டனத்திற்குரியது என்றும் அவர் கூறியுள்ளாா்.

*****************

ஆனந்த்

தமிழ்நாடு முழுவதும் ஒருகோடி பனை விதைகள் நடும் பணிகளை மாநில ஊரக வளர்ச்சி நீர்வளத்துறை அமைச்சர் திரு.ஆனந்த் இன்று தொடங்கிவைத்தாா்.

காஞ்சிபுரம் மாவட்டம் தேவரியம் பாக்கத்தில் இன்று தொடங்கிவைக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் பனை சாா்ந்த தொழில்கள் மூலம் மக்களின் வாழ்வாதாரம் மேம்பட வகை செய்யப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டம் நீங்கலாக மாநிலம் முழுவதும் 37 மாவட்டங்களிலும் நாட்டுநலப்பணி திட்டம், தேசிய மாணவர் படையினர், தன்னாா்வலர்கள், பொதுமக்கள் பங்களிப்புடன் பனை விதைகள் நடும் பணிகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

*****************

விஜய் தமிழன் பாா்த்திபன்

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் சேலம் கிளை சாா்பில் 26 புதிய அரசு நகர பேருந்துகளின் சேவையை மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு. விஜய் தமிழன் பாா்த்திபன் இன்று தொடங்கிவைத்தாா்.

ஓமலூர் நல்ல சமுத்திரம், தோப்பூர் உள்ளிட்ட இடங்களுக்கு இப்பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

*****************

நெல்லை

நெல்லை மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவலை கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

தீவிரபடுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆனந்த் மோகன் கூறியுள்ளா◌ா◌்.

இதற்காக கொசு ஒழிப்பு பணியாளர்களின் எண்ணிக்கை ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது என்றும் அவர் தொ◌ிவித்துள்ளா◌ா◌்..

கலெக்டர் வாய்ஸ்

*****************

பள்ளி கல்வித்துறை

தமிழக பள்ளிகளில் காலாண்டு விடுமுறையின்போது மாணாக்கருக்கு சிறப்பு வகுப்புகள் நடத்தவும், சுற்றுலா அழைத்து செல்லவும் தடை விதித்து பள்ளி கல்வித்துறை இன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

*****************

சரபோஜி

தஞ்சை அரண்மனை வளாகத்தில் மன்னர் இரண்டாம் சரபோஜியின் 249-ஆவது பிறந்த நாளை ஒட்டி அன்னாரது திருவுருவ சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ரேவதி உள்ளிட்டோா◌ா◌் இன்று, மாலை அணிவித்து மா◌ியாதை செலுத்தினர்.

*****************

இருவா◌ி

கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு வளாகத்தில் ராணுவத்திற்கான ஆள்சேர்ப்பு முகாம் நாளை தொடங்கி அடுத்த மாதம் 7ஆம் தேதிவரை நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.தினேஷ்குமா◌ா◌் தொ◌ிவித்துள்ளா◌ா◌்.

திருவள்ளூர் மாவட்டத்தில் வரும் 29ஆம் தேதி நடைபெற இருந்த விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை நடைபெறுகிறது.

திருப்பத்தூர் மாவட்டத்திற்குட்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி மாணாக்கருக்கான உயர்கல்வி வழிகாட்டு முகாம் நாளையும், வரும் 28ஆம் தேதியும் நடைபெறும் என்று ஆட்சித்தலைவர் திரு.நல்லசிவன் கூறியுள்ளா◌ா◌்.

திருச்சி மாவட்ட வேலைவாய்ப்பு தொழில்நெறி வழிகாட்டு மையத்தில் தனியா◌ா◌் துறை வேலை வாய்ப்பு முகாம் நாளை நடைபெறுகிறது.

*****************

மேட்டூர்

மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக திறக்கப்படும் நீரின் அளவு இன்று வினாடிக்கு 12 ஆயிரத்து 400 கன அடியாக அதிகாித்துள்ளது.

அணைக்கு நீர்வரத்து நான்காயிரத்து 960 கன அடியாக உள்ளது..

நீர்மட்டம் 83.07 அடியாகும்.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து வினாடிக்கு ஆறாயிரம் கன அடியாக உள்ளது.

*****************

தூத்துக்குடி மீனவர்கள்

வங்க கடல் பகுதியில் பலத்த காற்று வீசக்கூடும் என்ற வானிலை மையத்தின் எச்சரிக்கையின்படி தூத்துக்குடி மாவட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட விசை படகு மற்றும் நாட்டுப்படகு மீனவர்கள் 3ஆவது நாளாக இன்று கடலுக்குள் மீன்பிடிக்க செல்லவில்லை.

275 விசை படகுகள் கரையில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

*****************

ஆசிய விளையாட்டு

ஆசிய விளையாட்டு கபடி அரையிறுதிக்கு இந்திய ஆடவர் அணி முன்னேறியுள்ளது.

இந்தியா - சீன தைபேயை 32-17 என்ற கணக்கில் இன்று வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தது.

Wushu மகளிா் 60 கிலோ எடை பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்ற ரோஷிபினா தேவிக்கும்,

துடுப்பு படகு போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்ற Satnam sing, Salmankan இணைக்கும் ,

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்டோா் வாழ்த்து தொிவித்துள்ளனர்.

*****************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது